| R2744 |
|---|

| Sub. Code |
|---|
| 308201 |

**B.F.A DEGREE EXAMINATION, APRIL – 2025**

**Second Semester**

**Painting**

**METHODS AND MATERIALS**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**Part A** $(10 \times 1 = 10)$

Answer **all** the questions by choosing the right answer.

1. A ———— is a stick of pigmented was used for writing or drawing. (CO1, K1)

(a) Crayon (b) Bamboo

(c) Trunk (d) Tree

———— என்பது எழுதுவதற்கு அல்லது வரைவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற நிறமி குச்சியாகும்.

(அ) வரைமெழுகு (ஆ) மூங்கில்

(இ) தண்டு (ஈ) மரம்

2. Which of the following is still called as rubber? (CO1, K1)

(a) Lid (b) Eraser

(c) Liner (d) Cover

பின்வருவனவற்றில் எது இன்னும் ரப்பர் என்று அழைக்கப்படுகிறது?

(அ) மூடி (ஆ) அழிப்பான்

(இ) வரைவி (ஈ) உறை

3. Name the paint which is made with melted wax.(CO2, K1)

(a) Encaustic Paint (b) Impasto Painting

(c) Batik (d) Texture

உருகிய மெழுகால் செய்யப்படுகின்ற வண்ணப்பூச்சின் இவ்வாறு பெயர் பெறுகின்றது.

(அ) சூளையிட்டு வண்ணம் பாய்ச்சுதல்

(ஆ) திண்சாயப்பூச்சு

(இ) பாடிக்

(ஈ) இழைவுக்கூறு

4. ———— is widely used as adhesives, coatings or as a construction material when a strong bond is required. (CO2, K1)

(a) Powder (b) Lime

(c) Resin (d) Plaster of Paris

———— என்பது ஒட்டும் பொருட்கள், பூச்சுகள் அல்லது வலுவான பிணைப்பு தேவைப்படும்போது கட்டுமானப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது.

(அ) பொடி

(ஆ) சுண்ணாம்பு

(இ) கோந்து

(ஈ) பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ்

5. ———— is just as vibrant and opaque as acrylic paints. (CO3, K1)

(a) Tempera (b) Miniature

(c) Varnish (d) Water Color

———— என்பது அக்ரிலிக் வண்ணப்பூச்சுகளைப் போலவே துடிப்பான மற்றும் ஒளிபுகா தன்மை கொண்டது.

(அ) பற்றோவியம் (ஆ) சிற்றோவியம்

(இ) நெய்ச்சாயம் (ஈ) நீர் வண்ணம்

6. ———— Paintings, are small-scale, handmade paintings and it is painted on perishable materials. (CO3, K1)

(a) Miniature (b) Tempera

(c) Oil (d) Pop Art

———— என்பது மிகச்சிறிய அளவிலான, கையால் செய்யப்பட்ட மற்றும் அவை எளிதில் மட்கக் கூடிய பொருட்களில் வரையப்படுகின்றன.

(அ) சிற்றோவியம் (ஆ) பற்றோவியம்

(இ) எண்ணெய் ஓவியம் (ஈ) பாப் கலை

7. Name the painting method which is made a perfect picture of a subject. (CO4, K1)

(a) Abstract (b) Illustration

(c) Pastel (d) Encaustic

ஒரு பொருளின் சரியான பிரதிபலிப்பினை உருவாக்கும் ஓவிய முறை ————.

(அ) சுருக்கக் கலை

(ஆ) விளக்கக் கலை

(இ) நீலச்சாயம்

(ஈ) சூளையிட்டு வண்ணம் பாய்ச்சுதல்

8. ———— Potraits are belonged to the tradition of panel painting. (CO4, K1)

(a) Fayum (b) Sgraffito

(c) Gestural (d) Stippling

———— உருவப்படங்கள் என்பவை சட்டக ஓவிய மரபைச் சேர்ந்தவை.

(அ) ஃபாயும்

(ஆ) ஸ்கிராஃபிட்டோ

(இ) ஜெஸ்டரல்

(ஈ) ஸ்டிப்ளிங்

9. The most famous example of early encaustic art is ————. (CO5, K1)

(a) Fayum Mummy Portaits

(b) Liberal Art

(c) Pop Art

(d) Digital Art

தொடக்கக்கால சூளையிட்டு வண்ணம் பாய்ச்சுதல் கலையின் பிரபலமான எடுத்துக்காட்டு ————.

(அ) ஃபயும் மம்மி உருவப்படங்கள்

(ஆ) தாராளவாத கலை

(இ) பாப் கலை

(ஈ) டிஜிட்டல் கலை

10. Casein painting is ————. (CO5, K1)

(a) Spirit Precipitated (b) Milk Precipitated

(c) Water Precipitated (d) Varnish Based

கேசின் ஓவியம் என்பது ————.

(அ) ஆவி வீழ்படிவு

(ஆ) பால்வீழ்படிவு

(இ) நீர் வீழ்படிவு

(ஈ) வார்னிஷ் அடிப்படையிலானது

**Part B** $(5 \times 5 = 25)$

Answer **all** the questions not more than 500 words each.

11. (a) How to handle natural brush while doing paintings? Summarize the techniques. (CO1, K1)

ஓவியங்களை வரையும்பொழுது இயற்கை தூரிகைகளை எவ்வாறு கையாள்வது? நுட்பங்களைச் சுருக்கமாகக் கூறுக.

Or

(b) Why should top of cans be cleaned? List out the reasons for it. (CO1, K1)

கேன்களின் மேற்பகுதியை ஏன் சுத்தம் செய்ய வேண்டும்? அதற்கான காரணங்களை பட்டியலிடுக.

12. (a) Describe the contents of any of seven colors' visual appearance. (CO2, K3)

ஏதேனும் ஏழு வண்ணங்களின் காட்சித் தோற்றத்தின் உள்ளடக்கங்களை குறித்து விவரிக்க.

Or

(b) What is varnish, and why is it used by artists and conservators? Describe about it. (CO2, K3)

வார்னிஷ் என்றால் என்ன? கலைஞர்கள் மற்றும் பாதுகாப்பாளர்களால் அது ஏன் பயன்படுத்தப்படுகிறது? விவரிக்க.

13. (a) Elaborate the free composition in art with an example. (CO3, K3)

கலையில் எளிய ஆக்கத்தினை ஒரு எடுத்துக்காட்டுடன் விரிவுபடுத்திக் கூறுக.

Or

(b) Furnish details about any four minimalist composers through which you recently assess. (CO3, K3)

நீவிர் சமீபத்தில் மதிப்பீடு செய்த ஏதேனும் நான்கு எளிமைவாத ஆக்கக் கலைஞர்கள் குறித்த விபரங்களைப் பதிவு செய்க.

14. (a) Analyze the supports used in traditional tempera painting. (CO4, K4)

பாரம்பரியமுறையிலான பற்றோவியத்தில் பயன்படுத்தப்படும் கருவிகளைப் ஆய்வு செய்க.

Or

(b) Describe about the history of tempera painting. (CO4, K4)

பற்றோவியத்தின் வரலாறு குறித்து விரிவான தகவலைப் பதிவு செய்க.

15. (a) Distinguish the watercolor with poster color. (CO5, K3)

சுவர் வண்ணங்களுடன் நீர் நிறமிகளை வேறுபடுத்துக.

Or

(b) What is color sensation? Explain the usages of it. (CO5, K3)

நிறங்களை உணர்தல் என்றால் என்ன? அதன் பயன்பாடுகளை விளக்கிக் கூறுக.

**Part C** (5 × 8 = 40)

Answer **all** the questions note more than 1000 words each.

16. (a) Describe about the drawing and painting materials and their uses. (CO1, K1)

வரைதல், வரைவதற்கான பொருட்கள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் பற்றி விவரிக்க.

Or

(b) Short Notes :

(i) Tools

(ii) Palette

(iii) Dippers

(iv) Brushes (CO1, K1)

சிறு குறிப்பு தருக :

(i) கருவிகள்

(ii) தட்டு

(iii) தோய்ப்பான்

(iv) தூரிகைகள்

17. (a) Summarize the advantages and technical features of Acrylic paint. (CO2, K3)

அக்ரிலிக் வண்ணப்பூச்சுவின் நன்மைகள் மற்றும் தொழில்நுட்ப அம்சங்களை விளக்கிக் கூறுக.

Or

(b) Explain about the various types of gum resins used among Tamil artists. (CO2, K3)

தமிழ் கலைஞர்களிடையே பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான கோந்துகள் குறித்து விளக்குக.

18. (a) What is the traditional art? Discuss its importance in this changing context. (CO3, K3)

பாரம்பரியக் கலைகள் என்றால் என்ன? மாறிவரும் இன்றையச் சூழலில் அதன் முக்கியத்துவத்துவம் குறித்து விவாதிக்க.

Or

(b) Write an essay on 'Pigments and Brushes for Tempera Painting' (CO3, K3)

பற்றோவியத்திற்கான நிறமிகள் மற்றும் தூரிகைகள் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

19. (a) What is Composition? Furnish details of its definition, Types with examples. (CO4, K4)

கலவை என்றால் என்ன? அதன் வரையறை, வகைகள் பற்றிய விபரங்களை எடுத்துக்காட்டுகளுடன் தொகுத்தெழுதுக.

Or

(b) Short Notes : (CO4, K4)

(i) Cubism, (ii) Expressionism,

(iii) Surrealism, (iv) Fantasy

சிறு குறிப்பு தருக :

(i) கனவடிவாதம் (ii) வெளிப்பாட்டுவாதம்

(iii) அதீத கற்பனாவாதம் (iv) கற்பனா இன்பம்

20. (a) Elaborate the types and properties of Pigments. (CO5, K3)

நிறமிகளின் வகைகள் மற்றம் பண்புகளை விரிவாகக் கூறுக.

Or

(b) Short Notes :

(i) Helmholtz (ii) Maxwell

(iii) Munsell (iv) Ostwa (CO5, K3)

சிறு குறிப்பு தருக :

(i) ஹெல்ஹோல்ட்ஸ் (ii) மேக்ஸ்வெல்

(iii) முன்செல் (iv) ஓஸ்ட்வா

| R2745 |
|---|

| Sub. Code |
|---|
| 308401 |

**B.F.A. DEGREE EXAMINATION, APRIL – 2025**

**Fourth Semester**

**Painting**

**HISTORY OF WESTERN ART**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**Part A** $(10 \times 1 = 10)$

Answer **all** the questions by choosing the right answer.

1. The _________ also referred as the Eastern Roman Empire. (CO1, K1)

   (a) Byzantine Empire (b) Doukas

   (c) Macedonian (d) Amorian

   ___________ என்பது கிழக்கு ரோமானியப் பேரரசு என்றும் அழைக்கப்படுகிறது.

   (அ) பைசண்டைன் (ஆ) டௌகாஸ்

   (இ) மாசிடோனியன் (ஈ) அமோரியன்

2. _________ is a style of painting, sculpture, and architecture that was popular in western and central Europe during the middle Ages. (CO1, K1)

   (a) Gothic Art (b) Roman

   (c) Renaissance (d) Baroque

   __________ என்பது இடைக்காலத்தில் மேற்கு மற்றும் மத்திய ஐரோப்பாவில் பிரபலமாக இருந்த ஓவியம், சிற்பம் மற்றும் கட்டிடக்கலைப் பாணியாகும்.

   (அ) கோதிக் (ஆ) ரோமன்

   (இ) மறுமலர்ச்சி (ஈ) பரோக்

3. Leonardo da Vinci famous for (CO2, K1)

(a) Dramatic and Expressive Artwork

(b) Dadaism

(c) Fauvism

(d) Social Realism

பின்வருவனவற்றுள் லியோனார்டோ டா வின்சி இதற்கு புகழ்பெற்றவர்

(அ) வியத்தகு மற்றும் வெளிப்படையான கலைப்படைப்பு

(ஆ) தாதாயிசம்

(இ) ஃபௌவிசம்

(ஈ) சமூக யதார்த்தவாதம்

4. _________ was one of the great artists of the Italian Renaissance. (CO2, K1)

(a) Michelangelo (b) Amrita Sher-Gil

(c) Annada Munsi (d) Kalipada Ghoshal

பின்வருபவர்களில் இத்தாலிய மறுமலர்ச்சிக்கால கலைஞர் யார்?

(அ) மைக்கேலேஞ்சலோ

(ஆ) அம்ரிதா ஷெர்–கில்

(இ) அன்னடா முன்சி

(ஈ) கலிபாதா கோஷல்

5. _________ is a Western cultural movement that drew inspiration from the art and culture of ancient Greece and Rome. (CO3, K1)

(a) Neoclassicism (b) Structuralism

(c) Classism (d) Romanticism

__________ என்பது பண்டைய கிரீஸ் மற்றும் ரோமின் கலை மற்றும் கலாச்சாரத்திலிருந்து உத்வேகம் பெற்ற ஒரு மேற்கத்திய கலாச்சார இயக்கம் ஆகும்.

(அ) நவசெந்நெறிவாதம் (ஆ) அமைப்பியல்வாதம்

(இ) செந்நெறிவாதம் (ஈ) கற்பனை நவிற்சி வாதம்

6. It is a style of painting which developed in France in 19th century. (CO3, K1)

(a) Impressionism (b) Futurism

(c) Bauhaus (d) Classicism

இது 19 ஆம் நூற்றாண்டில் பிரான்சில் வளர்ந்த ஓவிய பாணியாகும்.

(அ) பாவியல் கலைத்திறம்

(ஆ) எதிர்காலவாதம்

(இ) பௌஹாஸ்

(ஈ) செந்நெறிவாதம்

7. _________ is a style of painting that originated in France in the early 20th century. (CO4, K1)

(a) Fauvism (b) Conceptual Art

(c) Constructivism (d) Supermatism

__________ என்பது 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரான்சில் தோன்றிய ஓவிய பாணியாகும்.

(அ) ஃபாவிசம் (ஆ) கருத்தியல் கலை

(இ) கட்டமைப்புவாதம் (ஈ) தூய கலை மேன்மைவாதம்

8. Find the following painter who a Spanish surrealist was known for exploring subconscious imagery. (CO4, K1)

(a) Salvador Dali (b) Max Ernst

(c) Hans Richter (d) Christian Schad

பின்வரும் ஓவியர்களுள் ஆழ்மன கற்பனையை ஆராய்வதற்காக அறியப்படுகின்ற ஸ்பானிய கற்பனைவாத ஓவியர் யார்?

(அ) சால்வடார் டாலி (ஆ) மேக்ஸ் எர்ன்ஸ்ட்

(இ) ஹான்ஸ் ரிக்டர் (ஈ) கிறிஸ்டியன் ஷாட்

9. _________ is often features vibrant colors, mass culture references and a blend of high and low art. (CO5, K1)

(a) Pop Art (b) Land Art

(c) Neon Art (d) Street Art

__________ என்பது பெரும்பாலும் கவரும் வண்ணங்கள், வெகுஜன கலாச்சார குறிப்புகள் மற்றும் கலைகளின் கலவையைக் கொண்டது ஆகும்.

(அ) பாப் கலை (ஆ) நிலக் கலை

(இ) நியான் கலை (ஈ) வீதிக்கலை

10. _________ Art is an extreme type of abstract art that usually is depicted through simplistic shapes and hard edge. (CO5, K1)

(a) Minimalism (b) Expressionism

(c) Cubism (d) Bauhaus

__________ கலை என்பது ஒரு தீவிர வகை சுருக்கக் கலையாகும், இவை பொதுவாக எளிமையான வடிவங்கள் மற்றும் கடினமான விளிம்புகள் மூலம் சித்தரிக்கப்படுகிறது

(அ) எளிமைவாதம் (ஆ) வெளிப்பாட்டுவாதம்

(இ) கனவாதம் (ஈ) பௌஹாஸ்

**Part B** (5 × 5 = 25)

Answer **all** the questions not more than 500 words each.

11. (a) List out the main characteristics of prehistoric paintings. (CO1, K2)

வரலாற்றுக்கு முந்தைய கால ஓவியங்களின் முதன்மையான பண்புகளை பட்டியலிடுக.

Or

(b) Differentiate the Roman and Greek painting with suitable example. (CO1, K2)

பொருத்தமான உதாரணத்துடன் ரோமானிய மற்றும் கிரேக்க ஓவியங்களை வேறுபடுத்திக் கூறுக.

12. (a) Describe the three phases of Renaissance. (CO2, K2)

மறுமலர்ச்சியின் மூன்று கட்டங்களை விவரிக்க.

Or

(b) Write a short note on Masaccio and his best known for. (CO2, K2)

மசாசியோ மற்றும் அவரது புகழ்மிக்க படைப்பு குறித்து சிறு குறிப்பு தருக.

13. (a) How do you define mannerism in art? Discuss. (CO3, K4)

கலையில் நடத்தையை நீவிர் எவ்வாறு வரையறை செய்வீர்? விவாதிக்க.

Or

(b) Summarize the main characteristics of Romanticism art. (CO3, K4)

கற்பனை நவிற்சி வாத கலையின் ஐந்து முதன்மையான பண்புகள் குறித்துக் கூறுக.

14. (a) What is Futurism? Explain it in the context of artwork. (CO4, K4)

எதிர்காலவாதம் என்றால் என்ன? ஒரு கலைப்படைப்பின் சூழலில் அதனை விளக்குக.

Or

(b) Provide some examples of symbolism art style of works in India. (CO4, K4)

இந்தியாவில் குறியீட்டுக் கலை பாணியின் சில எடுத்துக்காட்டுகளை வழங்குக.

15. (a) Furnish the details about pop art and its three characteristics. (CO5, K2)

பாப் கலை குறித்தும் மற்றும் அதன் மூன்று முதன்மையான பண்புகள் குறித்த விபரங்களைத் தருக.

Or

(b) Elucidate the meaning of minimal art. (CO5, K2)

எளிமைக் கலையின் பொருளைத் தெளிவுபடுத்துக.

**Part C** $(5 \times 8 = 40)$

Answer **all** the questions not more than 1000 words each.

16. (a) Write an essay on 'salient features of Greek and Roman Art' (CO1, K2)

'கிரேக்க மற்றும் ரோமானியக் கலைகளின் முக்கிய அம்சங்கள்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வரைக.

Or

(b) Differentiate the prehistoric paintings of France and Spain with suitable examples. (CO1, K2)

பிரான்ஸ் மற்றும் ஸ்பெயினின் வரலாற்றுக்கு முந்தைய கால ஓவியங்களை பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் கூறுக.

17. (a) Evaluate the impact of Proto-Renaissance in art, sculpture and architecture. (CO2, K2)

கலை, சிற்பம் மற்றும் கட்டிடக்கலையில் தொடக்ககால மறுமலர்ச்சியின் தாக்கம் குறித்து மதிப்பிடுக.

Or

(b) How to identify the high renaissance in art? Discuss it. (CO2, K2)

கலைகளில் உயர் மறுமலர்ச்சியை எவ்வாறுஅடையாளம் காண்பது? அதனைக் குறித்து விவாதிக்க.

18. (a) Short Notes:

(i) Edouard Monet,

(ii) Claude Monet,

(iii) Edger Degas (CO3, K4)

சிறு குறிப்பு தருக.

(i) எட்வார்ட் மோனெட்

(ii) கிளாட் மோனெட்

(iii) எட்ஜர் டெகாஸ்

Or

(b) Short Note :

(i) Georges Seurat,

(ii) Paul Cezanne,

(iii) Paul Gauguin,

(iv) Vincent Van Gogh (CO3, K4)

சிறு குறிப்பு தருக :

(i) ஜார்ஜஸ் சீராட்

(ii) பால் செசான்

(iii) பால் கௌகுயின்

(iv) வின்சென்ட் வான் கோக்

19. (a) Short Notes :

(i) Cubism,

(ii) Pablo Picasso,

(iii) Georges Braque,

(iv) Ferdinand Leger (CO4, K4)

சிறு குறிப்பு தருக :

(i) கனவாதம்

(ii) பாப்லோ பிக்காசோ

(iii) ஜார்ஜஸ் பிரேக்

(iv) ஃபெர்டினாண்ட் லெகர்

Or

(b) What is Abstract Expressionism? Explain it with an example of artist who involves in this. (CO4, K4)

சுருக்க வெளிப்பாட்டுவாதம் என்றால் என்ன? இச்சிந்தனைப் புலத்தில் ஈடுபடுகின்ற ஒரு கலைஞர் குறித்த உதாரணம் தந்து விளக்குக.

20. (a) Short Notes :

(i) Post Modern Trends,

(ii) New Media,

(iii) Installation (CO5, K2)

சிறு குறிப்பு தருக :

(i) பின்னைய நவீனப்போக்குகள்

(ii) புதிய ஊடகம்

(iii) நிறுவல்

Or

(b) Discuss the idea of illusory hyper realism in artworks. (CO5, K2)

கலைப்படைப்புகளில் மாயையான அதி யாதார்த்தவாத கருத்தைப் பற்றி விவாதிக்க.

———————

**R2746**

| Sub. Code |
|---|
| 308601 |

**B.F.A DEGREE EXAMINATION, APRIL – 2025**

**Sixth Semester**

**Painting**

**HISTORY OF MODERN WESTERN ART**

**(CBCS – 2022 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

**Part A**                                        $(10 \times 1 = 10)$

Answer **all** the questions by choosing the right answer.

1. ———————— is an art movement that depicts people and things as they are, without idealization of embellishment. (CO1, K1)

   (a) Realism            (b) Pragmatics

   (c) Structuralism            (d) Functionalism

   ———————— என்பது எவ்வித நோக்கமாக அலங்காரமோ இல்லாமல் அப்படியே சித்தரிக்கும் ஒரு கலை இயக்கம் ஆகும்

   (அ) யதார்த்தவாதம்            (ஆ) நடைமுறைவாதம்

   (இ) அமைப்பியல்வாதம்            (ஈ) செயல்பாட்டுவாதம்

2. Barbizon school is a ———————— school of painting movement towards naturalism in art, particularly landscape painting. (CO1, K1)

   (a) French            (b) American

   (c) Indian            (d) Egypt

பார்விசன் பள்ளி என்பது கலையில் இயற்கையை நோக்கிய, குறிப்பாக நிலக்காட்சி ஓவியத்தை நோக்கிய ஓவிய இயக்கத்தின் __________ பள்ளியாகும்

(அ) பிரெஞ்சு (ஆ) அமெரிக்க

(இ) இந்திய (ஈ) எகிப்து

3. Name of the school of thought which describes a type of painting developed in France. (CO2, K1)

(a) Impressionism (b) Diachronic

(c) Orientalism (d) Expressionism

பிரான்சில் உருவாக்கப்பட்ட ஓவியப் பாணியை விவரிக்கும் சிந்தனைப் பள்ளியின் பெயரைக் குறிப்பிடவும்

(அ) பாவியல் கலைத்திறம்

(ஆ) காலப்பார்வை

(இ) கீழைதேயம்

(ஈ) உணர்ச்சி வெளியீட்டு வாதம்

4. __________ is a post-Impressionist painting style that uses dark lines to separate flat areas of bright color. (CO2, K1)

(a) Closisonne (b) Pattachithra

(c) Leaf Arts (d) Pottery

__________ என்பது பிரகாசமான வண்ணத்தின் தட்டையான பகுதிகளை பிரிக்க இருண்ட கோடுகளைப் பயன்படுத்தும் ஒரு பிந்தைய பாவியல் கலைத்திறம் ஓவிய பாணி

(அ) க்ளோய்சோன் (ஆ) பட்டசித்ரா

(இ) இலை கலைகள் (ஈ) மட்பாண்டக் கலை

5. __________ favoured pairing complementary colors, like purple and yellow, magenta and green, or orange and blue. (CO3, K1)

(a) Fauvist (b) Post-Modernist

(c) Psychologist (d) Artists

———————— என்பவர்கள் ஊதா மற்றும் மஞ்சள், மெஜந்தா மற்றும் பச்சை அல்லது ஆரஞ்சு மற்றும் நீலம் போன்ற வண்ணங்களின் இணைப்பை விரும்பினர்

(அ) ஃபாவிஸ்ட் (ஆ) பின் நவீனத்துவ

(இ) உளவியலாளர் (ஈ) கலைஞர்கள்

6. It is a non-realistic art form that uses shapes, colors also uses other elements to evoke emotion and thought. (CO3, K1)

(a) Pop Art (b) Abstract Art

(c) Contemporary Art (d) Applied Art

பின்வருவனவற்றில் உணர்வினையும் சிந்தனையையும் தூண்டுவதற்கு வண்ணக் கூறுகளையும் வடிவங்களையும் பயன்படுத்தும் ஒரு யதார்த்தமற்ற கலை வடிவமாக அறியப்படுவது எது?

(அ) பாப் கலை (ஆ) சுருக்க கலை

(இ) சமகால கலை (ஈ) பயன்பாட்டு கலை

7. From the following ———— was closely associated with revolutionary new approach to representing reality. (CO4, K1)

(a) Cubism (b) Expressionism

(c) Fauvism (d) Applied Art

பின்வருவனவற்றில் யதார்த்ததை பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான புதிய அணுகுமுறையோடு நெருக்கமான தொடர்புடையது எது?

(அ) கனவடிவவாதம் (ஆ) வெளிப்பாட்டுவாதம்

(இ) ஃபாவிசம் (ஈ) நவீனத்துவம்

8. ———— is a movement founded by Italian poet Filippo Tommoso Marinetti. (CO4, K1)

(a) Futurism (b) Orientalism

(c) Impressionism (d) Realism

____________ என்பது இத்தாலிய கவிஞர் பிலிப்போ டோமாசோ மரினெட்டியால் நிறுவப்பட்ட ஒரு இயக்கம்

(அ) எதிர்காலவாதம்

(ஆ) கீழைதேயம்

(இ) பாவியல் கலைத்திறம்

(ஈ) யதார்த்தவாதம்

9. ____________ is a satirical and nonsensical art movement that emerged in Zurich during World War - I. (CO5, K1)

(a) Dada Art (b) Miniature

(c) Leaf Arts (d) Origami

____________ என்பது முதல் உலகப் போரின் போது குரிச்சில் தோன்றிய ஒரு நையாண்டித் தன்மையை வெளிப்படுத்தும் ஒரு கலை இயக்கம்

(அ) தாதா கலை (ஆ) நுணுக்கக் கலை

(இ) இலை கலைகள் (ஈ) காகிதக் கலை

10. Surrealism was a literary and artistic movement name the though from the following that was most closely associated with this movement. (CO5, K1)

(a) Andre Breton (b) Adolphe Wansart

(c) Georges Rouault (d) Jean Metzinger

அதீதகற்பனைவாதம் என்பது ஒரு இலக்கிய மற்றும் கலை இயக்கமாகும், பின்வருபவர்களில் இந்த சிந்தனை இயக்கத்துடன் தொடர்புடையவர் யாா?

(அ) ஆண்ட்ரே பிரெட்டன்

(ஆ) ஆடோல்ப் வான்சார்ட்

(இ) ஜார்ஜஸ் ரூவால்ட்

(ஈ) ஜீன் மெட்ஸிங்கர்

## Part B (5 × 5 = 25)

Answer **all** questions not more than 1000 words each.

11. (a) What is Post-Impressionism? Define it. (CO1, K2)

பிந்தைய பாவியல் கலைத்திறம் என்றால் என்ன? அதனை வரையறுக்க.

Or

(b) Explain the concept of Bohemian style. (CO1, K2)

போஹேமியன் பாணி குறித்து விளக்கம் தருக.

12. (a) Manet and his contribution to Impressionist. (CO2, K2)

பாவியல் கலைத்திறம் சிந்தனைக்கு மானெட் ஆற்றியப் பங்களிப்பு யாது?

Or

(b) Georges Pierre Seurat and his Post-Impressionist works. (CO2, K2)

ஜார்ஜஸ் பியர் சியூராட் மற்றும் அவரது பின்-பாவியல்கலைத்திறம் படைப்புகள்.

13. (a) Short Note : Abstract Art. (CO3, K4)

சுருக்கக் கலை குறித்து சிறு குறிப்பு தருக.

Or

(b) Examine the character of equilibrium in the Jackson Pollock works. (CO3, K4)

ஜாக்சன் போலாக் படைப்புகளில் சமநிலை தன்மை குறித்து ஆராய்க.

14. (a) Describe the influence of Cubism in art movement. (CO4, K4)

கலை இயக்கத்தில் கனவடிவவாதத்தின் செல்வாக்கை விவரிக்க.

Or

(b) Short Note on 'Pabloc Picasso'. (CO4, K4)

'பாப்லோ பிக்காசோ' பற்றிய சிறு குறிப்பு தருக.

15. (a) Assess the work of Marcel Duchamp which you mostly like. (CO5, K2)

நீவிர் அதிகம் விரும்பிய மார்செல் டுச்சாம்பின் படைப்புகளை மதிப்பிடுக.

Or

(b) Why is René Magritte considered as Surrealist? Discuss it. (CO5, K2)

ரெனே மாக்ரிட் ஏன் அதீதகற்பனாவாதியாகக் கருதப்படுகிறார்? அதனிக் குறித்து விவாதிக்க.

**Part C** (5 × 8 = 40)

Answer **all** the questions not more than 1000 words each.

16. (a) Classify to the social and historical background of 20th century in line with artworks. (CO1, K2)

இருபதாம் நூற்றாண்டின் சமூக மற்றும் வரலாற்று பின்னணியில் கலைப்படைப்புகளில் ஏற்பட்ட மாற்றத்தினை வகைப்படுத்திக் கூறுக.

Or

(b) Explain the contribution of Jean Désiré Gustave Courbet to realism. (CO1, K2)

ஜீன் திசைர் யுஸ்டாவ் கோர்பெட்டின் யதார்த்தவாத பங்களிப்பு குறித்து விளக்குக.

17. (a) Categorize the techniques of painting on their thought based. (CO2, K2)

ஓவியங்களின் நுட்பங்களை அவைகளின் சிந்தனையின் அடிப்படையில் வகைப்படுத்துக.

Or

(b) Define Post-Impressionism and its history & Characteristics. (CO2, K2)

பின்-பாவியல்கலைத்திற சிந்தனை வரலாறு மற்றும் அதன் சிறப்பியல்புகளை குறித்து குறிப்பிடுக.

18. (a) Describe any one of the artist in Abstract expressionism with suitable examples. (CO3, K4)

சுருக்ககலை வெளிப்பாட்டுவாத சிந்தனைப் புல கலைஞர் ஒருவர் குறித்து பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

Or

(b) Short Notes :

(i) Willem De Kooning

(ii) Mark Rothko

(iii) Franz Kline

(iv) Lee Krasner (CO3, K4)

சிறு குறிப்பு தருக:

(i) வில்லெம் டி கூனிங்

(ii) மார்க் ரோத்கோ

(iii) ஃபிரான்ஸ் க்லைன்

(iv) லீ க்ராஸ்னர்.

19. (a) Differentiate the Analytic Cubism and Synthetic Cubism. (CO4, K4)

பகுப்பாய்வு கனவடிவவாதம் மற்றும் செயற்கை கனவடிவவாதம் குறித்து வேறுபடுத்திக் கூறுக.

Or

(b) Distinguish the idea of Cubism with Futurism. (CO4, K4)

கனவடிவவாதம் என்ற கருத்தை எதிர்கால வாதத்துடன் சில எடுத்துக்காட்டுகளுடன் ஒப்பிடுக.

20. (a) Make a detailed comparison between Dadaism and Surrealism with some examples. (CO5, K2)

தாதயிசம் மற்றும் சர்ரியலிசத்திற்குமிடையேயான வேறுபாட்டைனை ஒப்பீடு செய்க.

Or

(b) Explain the surrealist characteristics with pre-surrealist. (CO5, K2)

சர்ரியலிசத்திற்கு முந்தைய காலக் கலைப்பண்புகளை சர்ரியலிச காலக்கலை பண்புகளுடன் விளக்குக.

———————